உ

# ஸ்ரீமத்-அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திரச் சுருக்கம்






உ

சிவமயம்

# ஸ்ரீமத்-அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திரச் சுருக்கம்

பாம்பன்:

**ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்**

செய்தருளிய மகாப்பிரசங்கத்தினின்றெடுத்து

ஸ்ரீமத் பாம்பன் அடிகளாரின் சீடர்களுள் ஒருவரான

**மா. துரைசாமி முதலியார் அவர்களால்**

சுருக்கமாக வரையப்பட்டது.

**மஹாதேஜோ மண்டல வெளியீடு**

திருவான்மியூர், சென்னை – 41

**2020**

**விலை : ரூ. 25.00**

உ

# திருப்புகழ்

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட

மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாட நீயாடி வரவேணும்

கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்

உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பார்பி ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

உ
சிவமயம்
ஓம் குஹேசாய நம :

# ஸ்ரீமத் – அருணகிரிநாதனார் சரித்திரம்
(1966-ஆம் ஆண்டு வெளிவந்த)
## இரண்டாம் பதிப்பின் முன்னுரை

தூய செந்தமிழ் வழங்கும் இத்தென்னாடு செய்த தவப்பயனாகவும், சைவம் தழைத்தோங்கவும் உதித்தருளிய ஸ்ரீ ஞானசம்பந்தராதி சமயாசாரிய நால்வர் பெருமான்கள், ஏனைய நாயன்மார்கள், சந்தான குரவர்களெனப்படுவோர், பட்டினத்தடிகள், தாயுமானார், குமரகுருபரர், சிதம்பரசுவாமிகள், திருக்கயிலாய பரம்பரையார் எனக் கூறிக்கொள்ளும் மடாதிபதிகள் மற்றும் பலர், இவர்கள் யாவரும் முக்தியடைந்த தினங்களை யாவரானுங் கொண்டாடா நிற்க, ஸ்ரீமத் – அருணகிரிநாத முனீந்திரர் முத்தி யடைந்து சுமார் 400 வருடங்களாகியும், அவருக்கு அவர் முத்தியடைந்த நாளைக் குறிப்பிட்டு இதுவரையில் அந்நாளை எவரானும் கொண்டாடப்படாமல் இருந்துவருவதைக் குறித்தும், அவருடைய சரித்திரத்தை முதன் முதலாக வெளியிட்டோர், அவருடைய உண்மை நிலையை அறியமாட்டாதவராய், பரத்தையர்களோடு சிற்றின்பத்தில் ஈடுபட்டு அதன்வழி வந்த பெருநோயால் துன்புற்றனர் என்றும் வரைந்துள்ளதையும், அதனைப் பின்பற்றி நாடகக்காரர்களும் அவ்வாறே நடித்துக் காட்டுதலையும், அறிந்து பெரிதும் கவலையுற்றவராய், அவரைப் பின்பற்றி அவரைப் போலவே அறுமுகச்சிவனார்

ஒருவனையே வழிபட்டுத் திருவடிப்பேறெய்தியவருமாகிய பாம்பன் – ஸ்ரீமத் – குமரகுருதாச சுவாமிகள் சென்னை புதுப்பாக்கம் சிவசுப்பிரமணிய பக்தஜன சபா மண்டபத்தில் ஓர்நாள் ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளின் தூய சரித்திரம் இதுவேயென்று பலர் முன்பாக எடுத்துக்காட்டினார். அஞ்ஞான்று தமது சீடர்களுள் ஒருவர் திருவாளர் – சம்பந்த முதலியார் என்பார் கனவில் ஸ்ரீமத் – அருணகிரி நாதனார் முக்தியடைந்த தினம் உத்தராயணத்து ஆறாம் பௌர்ணமி என்று புலப்படுத்தப்பட்டுள்ளபடி அந்நாளை ஸ்ரீமுருகப் பெருமானை வழிபடுவோர் யாவரும் கொண்டாடுவார்களாக என்று கூறித் தமது மகாப்பிரசங்கத்தை முடித்தனர். அதனையே பாம்பனடிகளாரின் சீடர்களுள் ஒருவர் திருவாளர் – மா. துரைசாமி முதலியார் என்பார் சுருக்கி முதற்பதிப்பாக வெளியிட்டனர். அதன் பிரதி தற்காலம் கிடைக்கப் பெறாமையால் அதனையே இஞ்ஞான்று இரண்டாம் பதிப்பாக எம்மால் வெளியிடப்படுகிறது.

பாம்பனடிகளார் மேற்படி சரித்திரச் சொற்பொழிவை இயற்றுமுன்னர் வெளியிடப்பட்டிருந்த ஸ்ரீமத் – அருணகிரிநாத னாரின் சரித்திரத்தில், அவர் சிற்றின்பத்திலீடுபட்டிருந்ததாக வரையப்பட்ட காரணம்:– அவர் பாடியுள்ள திருப்புகழ் பாக்கள் ஒவ்வொன்றிலும் முற்பாதி சிற்றின்பத்தையும், பிற்பாதி பேரின்பத்தையும் காட்டி நிற்பதால் என்று தெரிய வருகிறது என்றும், மேற்படி நாதனார் பாடல்கள் வண்ணச் செய்யுள்கள் என்றும், வண்ணச் செய்யுள்களின் விதியறிந்து பாடியுள்ளா ரென்று தெரிந்து கொள்ளாமையேயாம் என்றும் கூறி அவ்விதியைக் காட்டும் செய்யுள் ஈதெனவும், அதனையும்

அச்சொற்பொழிவில் எடுத்துக்காட்டி ஸ்ரீமத் - அருணகிரிநாத னார் யாண்டும் எஞ்ஞான்றும் சிற்றின்பத்தில் ஈடுபட்டாரல்லர் என்றும் கூறி முடித்தார்கள்.

ஞானிகள் தங்கள் சரிதத்தைத் தாங்களே எழுதிவைப்பது ஆரவாரத்தின் பாற்படும் என்று கருதி அச்செயலில் ஈடுபட்டாரல்லர். அவர்கள் காலத்திலிருந்த புலவர்கள் அக்காரியத்திலீடுபட்டிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் எழுத முன்வராத காரணம் - அவ்வித ஞானிகள் வெறுங்கல்வி மட்டும் பயின்றுள்ள புலவர்களோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளாததும், பொதுவாகப் புலவர்கள் மாட்டுள்ள அசூயையுமேயாம். "யாமோதிய கல்வியும் எம்அறிவும் தாமேபெற வேலவர் தந்தது" என அருணகிரிநாதரும், "கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்" என மாணிக்க வாசகரும் பாடியிருத்தலைக் கொண்டே அவ்வித ஞானிகள் வெறுங்கல்வி மட்டும் பயின்றுளாரோடு தொடர்பு கொள்ளாதவர் களாகிப் பேரின்பத்திலேயே எஞ்ஞான்றும் திளைத்திருந்தார்களென்று தெரியவருகிறது. இதனாலேயே ஞானிகளின் உண்மைச் சரித்திரம் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

நாள் : 15-7-66

ஸ்ரீமத் பாம்பன் அடிகளாரின்
சீடர்களுள் ஒருவன்
"**குமாரச்சிவம்**" எனப் பெயரிய
**தா. வேங்கடாசல முதலியார்**

உ
சிவமயம்
ஓம் குஹேசாய நம :

# 1966–ஆம் ஆண்டு வெளிவந்த இரண்டாம் பதிப்பின் முகவுரை

அருணகிரிநாத சுவாமிகளது திவ்விய தின குருபூஜையானது உத்தராயணத்து ஆறாம் பௌர்ணமி யெனவேற்பட்டு அது, சென்னையைச் சார்ந்த புதுப்பாக்கமென்னுங் குமாரபுரத்துச் சிவசுப்பிரமண்ய பக்த ஜன சபா மண்டபத்திலே காலயுத்தி வருஷம், ஆனி மாதம் 11–ஆம் தேதி (24–6–1918) கொண்டாடப்படுகையில், அவரது திவ்ய சரித்திரம் முருகப்பெருமானுடைய திருவருட்டூண்டுதலான் ஆசிரியர் அருணகிரிநாதரைப் போன்று அவனொருவனையே அதீத பரம்பொருளென யாண்டு மெஞ்ஞான்றுங் கொண்டு நிற்கு நிலையிலே கத்திய பத்திய ரூபமான பல சாத்திரங்களையுந் தோத்திரங்களையு மருளிச் செய்தவரும், அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானுவாய் விளங்குபவருமாகிய பாம்பன்: ஸ்ரீமத் – குமரகுருதாச சுவாமிகளவர்களால் விரிவாக வெடுத்துரைக்கப் பட்டது. அங்ஙனமே, “எங்கருத்தின்படி இக்குரு பூஜா தினத்தைக் குறிப்பிட்டு இத்தினத்தே அது கொண்டாடுகவென்று ஓரன்பரது கனவிற்றோன்றிச் சொல்லியருளிய ஸ்ரீமத் – அருணகிரிநாத சுவாமிகளது திருமேனி யானது 35–40 வயதுடைத்தென்பதை ஈங்குற்ற மஹாதேஜோ மண்டலத்தாரும் ஏனையோருமறிவீர்களாக வென்றும், சுவாமிகளது சரித்திரம்

பலராற் பல விகாரமுறச் சொல்லிக் கொள்ளப்படுகிறது; யாமதனை நின்மலமாகவே இயன்றவாறு புகன்றா'' மென்றுங் கூறி முடித்தார்கள்.

**மேலே குறிப்பிட்டவாறு உத்தராயணத்து ஆறாம் பௌர்ணமியை அருணகிரிநாதரது குருபூஜா தினமாக ஆண்டு தோறும் அன்பினர் யாவருங் கொண்டாடுவார்களாக.**

இங்ஙனம்,
ஸ்ரீமத் – பாம்பன் அடிகளாரின் சீடர்களுள்
ஒருவன்,
**மா. துரைசாமி முதலியார்**



உ

சிவமயம்

பாம்பன்

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் அருளிய

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் துதி

அருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழ்ந்த**வரு ளருணகிரி**
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

–தகராலயரகசியம்

அருவத்திருமேனி நான்காகியும், உருவத் திருமேனி நான்காகியும், சொல்லப்பட்ட இருதிறமும், பொருந்தியுள்ள அருவுருவத்திருமேனி யொன்றாகி யும், (துடத்தலக்கணத்துள்ள) இம்மூவகையினுள் (ஒன்றாக) வைத்துத் துதித்தற் கியலாத பரவெளிக்கும் (சொரூப லக்கணத்தால்) அப்பாற்பட்டு விளங்குவதாகி யுமுள்ள பரம்பொருள் இதுவேயென்று மிகுதியுங் குகக்கடவு ளொருவனையே புகழ்ந்து பாடி, அவனருளையடைந்த **அருணகிரிநாத தேசிக மூர்த்தி**யுடைய செம்மை முதலிய அழகுகள் வாய்ந்த திருப்பாதமலர்களை

(எமது) உள்ளத்தினுள்ளே நிலைபெற வைத்துக் கொள்ளா நின்றேம்.

---

குகப்பிரமத்தின தருளாற் சர்வஞ்ஞத்துவம், சுவப்பிரகாசத்துவம், வியாபகத்துவம் முதலிய திவ்விய குணங்களையடைந்த அப்பெருந்தகை யினையுங் குகப்பிரமமென வணங்குமியல்பினராகலின் அவர்க்கு வணக்கங் கூறினர். அவர் அத்திறப் பேறு பெற்றவரே யென்பது – அவர் திருவாய் மலர்ந்தருளிய *கந்தரனுபூதியில் –

“‘பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.’
எனவும்,

‘ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.’ எனவும்,

‘குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுறைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.’
எனவும்,

'நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.**, ''

எனவும் வருவனவற்றானும் வலியுறுத்தப்படும். ''கந்தரனு பூதி பெற்றுக் கந்தரனு பூதிசொன்ன – எந்தையரு ணாடி யிருக்குநா ளெந்நாளோ.'' எனத் **தாயுமான சுவாமிகள்** பாடியருளியதையு மிங்ஙனுய்த்துணர்க.

*சிலர் இந்நூற்கு இயந்திரங்களும் மந்திரங்களு மிருப்பனவாகப் பலவாறெழுதி வெளியிட்டிருப்பன அங்கீகரிக்கப்படுவனவல்ல. வீடுபேறெய்திய கண்ணப்ப நாயனாரே நக்கீரராய்ப் பிறந்தார், அவர் பொய்யாமொழிப் புலவராய் வந்தார், அவரே அருணகிரிநாத னாரென்பனவாதி பல ஒவ்வாச் செய்திகளை யுட்கொண்டதாய் அருணகிரிநாதர் புராணமெனும் பெயர்த்தா யுள்ள புத்தகமும் அங்கீகரிக்கப் படுவதன்று.

**கந்தரனுபூதிக்கு இதுவே யிறுதிச் செய்யுளாதல் வேண்டும்.

– பாம்பன் சுவாமிகளின் தகராலய ரகசிய உரை

உ

சிவமயம்

# ஸ்ரீமத் – அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திரச் சுருக்கம்

“ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே”

– கந்தரனுபூதி

திருவருட் பெருஞ்செல்வர் பலர் செறிந்து விளங்கும் இயல்பினையுடைய பரத கண்டத்தின் தென்புறத்ததாய தமிழ்நாட்டின் நடுநாட்டிலே புலவர்களால் இத்துணைப் பெருமை வாய்ந்ததென வரையறுக்கப்படாததும், தேவர், முனிவர், சித்தர் யாவரானுந் துதிக்கப்படு சிவலிங்க மூலகாரண நிலயமாகவுளதெனச் சைவ மகா புராணத்தாலெடுத் துரைக்கப்படுவதும், அரிபிரமர் தேட நின்ற சோதி சயிலம் அல்லது அருணகிரி என்று கூறப்படுவதுமாகிய திவ்விய பதியிலே, சற்றேறக்குறைய 400 வருடங்கட்கு முன்னே, உருத்திர கணிகையர் மரபிலே, தம் உடல் பொருள் ஆவி மூன்றனையும் சிவார்ப்பணஞ் செய்து வதியும் பெருமைமிக்க முத்தம்மையென்னும் பெயரிய அம்மையாரொருவரிருந்தார். அவருக்குப் பெண் மகவொன்றுண்டு. ஆண் சந்ததி யில்லாமையினால் அவர் அருணாசலேசரை நோக்கிச்

"**சுவாமீ! இவ்வடியாட்கொரு ஆண் மகவை யளிப்பையேல் அதற்கு நின் சொரூபமாகிய 'அருணகிரி' என்னுமொரு பெயரைச் சூட்டுவே**" னென்றும், குமாரமூர்த்தியை நோக்கி "**ஐயனே! எனக்கொரு ஆண்மகவு பிறக்குமேல் நின்றிருவருள் விலாச ஞானியா யிருக்க வேண்டு**" மென்றுந் தவங்கிடந்தனர். அத்தவப் பயனாகவே அவர் *ஆங்கோரனுக்கிரக நோக்க மருவப் பெற்றுச் சூன் முதிர்ந்து ஓராண் மகவை யீன்றனர்; அம்மகவிற்குத் தமது நிருணயத்தின்படி அருணகிரி யென்னுந் திருநாமத்தையே சூட்டினர். அந்நாமமுடைப் பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கல்வி பயின்று வரும்போது அவருக்கு ஏழாம் ஆண்டுற்றதும் அவருடைய அருமைத் தாயார் முத்தம்மையார், இம்மண்ணுலக வாழ்க்கை நீத்து விண்ணுலகெய்தினர். பின்னர், அருணகிரியார்க்குத் தம் முன் பிறந்தாளது ஆதரவைத் தவிர வேறு புகலிடமில்லை யாயிற்று. முன் பிறந்தாளுந் தம்பியரிடத்தே கொண்ட அன்பு, இதனினூங்குப் பெருகுமாறில்லையெனப் பெருக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது. அருணகிரியார் இங்ஙனம் வளர்ந்துவரு நாளில் ஊழ்வினைப் பயனாக உடம்பிற் பெரு நோயெய்தப் பெற்று வருந்துவாராயினார். இந்நோய் பெண்கள் விழைச்சு மிக்கதனாலுற்ற தென்றும், அதற்கவர் பாடல்களுட் சான்றுகளுள வென்றுங் கூறுதல் கொள்ளப்படுவதன்று; என்னை?

---

* ஆதிசங்கராச்சாரியார், இயேசு கிறிஸ்து என்பவர்களின் பிறப்பினை இஃது மொக்கும் என்க.

"வாதுப் பாவே வண்ணப் பாவே
வண்ணம் ஒன்றுக்குப் பாதம் நான்கே
பாதம் இரண்டு கலைஎனப் படுமே
கலைஒரு மூன்று சீர்எனத் தகுமே
சீரேதுள்ளல் எனச்செப்பப் படுமே
முதற்கலைக் கிடுவது தெய்வச் செயலே
இரண்டிற் கிடுவது கிளைகொடை விருது
மூன்றிற் கிடுவது புகழும் வீரமும்
நான்கி னாயக நாட்டின் வளத்தோடு
ஊரும் பேரும் உவப்பக் கூறல்
மற்றைப் பாதி நற்றாய் இரங்கல்
ஆதியா அகப்பொருள் அமைந்த கிளவியிற்
கூறல் என்ப குறிப்புணர்ந் தோரே."

என்னும் விதியின்படி உண்ணிகழ்ச்சியான சிற்றின்பத்திற்குரிய அகப்பொருளென்னும் இலக்கணப் பொருட்சம்பந்தம் பிற்பாதியிற் பொருந்தப் பெண்ணழகு, நடை, உடை, பாவனை முதலிய வருணனைகளோடு பாடுவது வண்ணமாகலிற் பேரின்பத்தை யவாவிய அவ்வருணகிரிப் பெருமான், பிற்பாதியில் வைத்து முடிக்கப்படும் அகப்பொருட் சம்பந்தத்தை முற்பாதியில் வைத்து அதனை இகழ்ந்தும் முற்பாதியில் வைக்கப்படும் தெய்வச் சிறப்பு முதலியவற்றைப் பிற்பாதியில் வைத்துப் புகழ்ந்தும் பாடுவாராயினாராகலின், இத்திறப் பாடல்களே திருப்புகழ் முறையுள் அதிகமுமுள்ளன. சிற்றின்பத்தின் முடிவு கூறாது பேரின்பத்தின் முடிவு கூறுவதே அவரது கோட்பாடென் பதிங்ஙன முணரக் கிடப்பதொன் றாகும்.

போந்த விதியிலே "துள்ளல்" எனப்பட்டதே "தொங்க" லெனவும்படும். இஃது அவ்வக்கலைக்குப் பின்னே வருவது.

**திருப்புகழில் - "என வோதும்" "அடிபேண" "பெருமாளே"** என வருவனவற்றானதனை உணரலாம். இவ்வாற்றானே, திருப்புகழ்ப் பாடலெல்லாம் வண்ண நடையினவென்பதேற் புடைத்தாம்.

**"கொந்து குழற்கோல்வளையார் குவி முலைமேல் வீழ்வேனை"** என மணிவாசகப் பெருமான் கூறியவாறு பெரியோர்கள், தங்களை யிழிவின் பாற்படுத்தோதுதல் வழக்கமாகலின் அவ்வாறு அருணகிரிநாதனார் பாடல்களிலுஞ் சிலவுளவாமென்க. அவர், கல்வியும், ஒழுக்கமும், கடவுள் பத்தியும் நிரம்பியவராகவே யிருந்தாரென்பதேற் புடைமையாம்.

அம்முன் பிறந்தாள், அன்பின் உயர்ச்சியினால் மனஞ்சலியாமே தாயின் மொழிகளைக் கடவாமே சகோதரரைப் பெரிதும் ஓம்பி வந்தனரேனும், அருணகிரியார், தமக்குற்ற பெருநோய் வலியையும், முன்னவட்கு உற்ற சிரமத்தையும் எண்ணி எண்ணி யிடுக்கணுற்றவராய், அண்ணாமலைச் சிவாலயத்தின் கோபுரத்தே வடபுறத்திலுள்ள முருகப்பெருமானது சன்னிதியைக் காண்டலுங், கண்ணீருங் கம்பலையுமாய் நின்று கதறி, அப்பெருமானைச் சரணடைந்து அங்கேயே இருந்தனர். அவரது உள்ளம் பள்ளத்துத் தங்கிய வெள்ளம்போல (ஓடாது) முருகப் பெருமானையே சிந்தித்திருக்குமொரு தியானத்தில் ஆறு நாளிருந்ததற்பின் அப்பெருமான், அவரை யாட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு

**“முத்தைத்தரு பத்தித் திருநகை யத்திக்கிறை சத்திச் சரவணமுத்திக் கொருவித்துக் குருபரவெனவோதும்”** என அடியாரம்பம் எடுத்துக் கொடுத்துத் தன்னைப் பாடும்படிக் கட்டளையிட்டனன். அங்ஙனமே, அருணகிரிநாதரும் அதுகொண்டு பாடத் தொடங்கினார்; பாடிவரும் போதே உற்ற குட்டம் ஒழிவடைந்ததையும், உடம்பில் முன்னிலும் மிக்க வெழிலொளி இலங்குவதையும் கண்டதிசயித்தார். இறைவனெடுத்துக் கொடுத்த மொழித்தொடரின் முதற்கண் **“முத்து”** எனவிருக்கும் மங்கலமொழியின் முதலெழுத்தானது மகாரத்தணைந்த சிருட்டியாகிய அகார மாத்திரையை உள்ளடக்கித் திதியாகிய உகாரமும், அகங்கார சங்கார மகாரமுந் திகழ நிற்கின்றது. இஃது, இவராற் பாடப்படுவனவெல்லாந் தமிழ் வேதமாம்; வீட்டு நூலாமென்னுந் துணிபுணர்த்துவதாகும். அன்றி, முத்து என்னும் அம்மங்கலமொழிக்கட் காயத்திரியின் முதலெழுத்தாய தகாரமிருத்தலும், அம்மொழி அருணகிரிநாதருடைய அன்னை பெயராயிருத்தலும் நன்கு கருதத் தக்கனவாகவேயுள. அவ்வன்னையினருந் தவத்தையும் வெளிப்படுத்துங் கருத்தானே இறைவன் அம்மொழியை யெடுத்து வைத்தனன் போலும். பின்பு, தம்மையாட்கொண்ட முருகப் பெருமானுடைய சன்னிதியையே தமக்குரிய வாசத்தானமாகக் கொண்டு, எள்ளற்குரிய இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து, அவனுடைய திருப்புகழ்களை எடுத்துப் பாடுவதே தமக்குரிய தொண்டெனவெண்ணி அந்நிலை நிற்குமவர், முழுமுதற்கடவுளாகிய முருகவேள்

திருக்கோயில் கொண்டுள்ள பல தலங்கள் போந்தும் அவனைப்பாடிப் பழிச்சி வருவாராயினார்.

இங்ஙனம், உலகவினை அடங்கலு மொருவித் தம்மையாட் கொண்ட ஐயனையே இடையறாது எண்ணி அவனை தரிசிக்க வேண்டுமென்னும் பேரவா மீக்கொண்டவராய் அவரிருந்தார். அவ்வொரு குறையினாலேயே அவரது நன்னெஞ்சமானது நைந்து நைந்து உருகுவதாயிற்று. பின்னர் அக்குறை நீங்காமை கருதிப் பின்வருமாறு செய்யத் துணிந்தார். பல்லாயிரந் திருப்புகழ்ப் பாக்களடங்கிய தம் புத்தகத்தைக் கையிலேந்தித் திருவருணைக் கோபுரத்தின் மீதேறி நின்றார்; இறைவனை நினைந்தழுதார்; அப்பாக்களையு மொருமுறை பாராயணமாகப் படித்து முடித்தார். அப்போதும் இறைவன் தரிசனமவருக்குக் கிடைக்க வில்லை. உடனே அருணகிரிநாதர் ஆண்டு நின்றபடியே திருப்புகழ் வரைந்துள்ள ஏடுகளை உருவிக் கீழேவிட்டு 'எம் அடிகளே!' என்று கீழே குதித்தனர். குதித்திடலுங் கருணாமூர்த்தியாகிய குமாரபகவான், மனித வுருக்கொடு வந்து அவரைத் தாங்கிவிட்டு எதிர்நின்று "இளம் பூரணனைத் தரிசித்துய்யப் பிராணனை விடுவதாற் பயனின்று; இன்னுந் தவஞ் செய்தல் வேண்டும்" எனக்கூறிச் **சடக்கரோபதேசஞ்** செய்து, உருத்திராக்கங் கோக்கப்பட்ட செபமாலை யொன்றளித்து மறைந்தருளினார். பின்னர், இவ்வாறு வந்தருளினவன் அவனே யென்றுணர்ந்துகொண்ட அருணகிரியார், அரிய தவத்தைச் செய்திருக்க; பெருமான் அங்ஙனமே கிரியை ஞான மெனப்படு தன்னுடைய

தேவிமாருடன் மயூரவாகனத்தின் மீது தரிசனந்தந்து சோதிசுடரக் கோயிலுட்புக்கு மறைந்தருளினன். பின்னர் அவன், மாமுனிவராய அடியார் குழாம் புடைசூழ நாதருக்குத் தரிசனங் கொடுத்து ஓங்காரத்தை யுபதேசித்துச் "சும்மா விருசொல் லறவென் றலுமே" என்றபடி மோன நிட்டை யிலே அவரையிருத்திப் பரிபூரண சுவானுபூதிமானாகச் செய்தருளி மறைந்தனன்.

திருஞான சம்பந்தர் முதலிய பெரியார் நோய்தீர்த்தன் முதலிய பல அற்புதங்களைச் செய்து ஐம்முகச் சிவபெருமானுடைய அருட்பாட்டினையும், அப்பெருமானை வழிபடுமாற்றினையும் விளக்கியருளியவாறு அருட்பெருங் கடலாய அறுமுகச் சிவனாரது பெருந்தகையை விளக்கவெழுந்த, ஆசிரியர் – அருணகிரிநாத முனீந்திரரும் குருடு, குட்டம் முதலிய நோய்களை நீக்குதலாதி பல அற்புதங்களைச்செய்து, அவனொருவனையே வழிபட்டு வீடுபேறுறுவது திண்ணமென்பதையு நாட்டுவாராயினார். ஆசிரியர் – அருணகிரியாருக்குப் பெருமான் வயலூரிற் பின்னருந் தரிசனந்தந்ததும், அவரை விராலிமலைக் கழைத்ததும், கொடுங்குன்றம், சிதம்பரம் முதலிய திருப்பதிகளில் முருகப்பெருமானே நிருத்த தெரிசனங் காட்டி யருளியதும் வேறு பலவும் உடையானுக்கும் உடைப் பொருட்குமுள்ள தொடர்பினை விளக்குவனவாயுள.

வில்லிபுத்தூராழ்வாரென்னு மொரு வைணவர் திருவண்ணா மலைத் தலத்தையெய்தி அருணகிரிநாதர் சந்தம் பாடுதலில் வல்லாரென்றோர்ந்து, ஆண்டுச் சிவபத்தி

சிவனடியவர் பத்தியால் இன்னலொழிய இனிது வைகியிருந்த பிரபுடதேவ மஹாராஜாவினது விருப்பத்தின்படி அந்நாதரோடு வாதிழைக்கும்போது நாதர், கந்தரந்தாதி பாடிவர; ஆழ்வார் பொருள் கூறிக்கொண்டு வந்து தகரவிகற்ப யமகச் செய்யு ளொன்றற்குப் பொருள் கூறாது மயங்கித் தோல்வித் தானமடைந்து, தம்முன்னந்தோற்றார் செவிகளைத் தம் வாளாற்றாமே யரிந்து கொண்டு வந்தவாறு தம்முடைய செவிகளையு மிங்ஙனமரிந்து கொள்ளலா மென்று அவ்வாளை எதிரில் வைத்துக்கூற; அது கண்ணுற்ற நாதர், "இனியொருவர் காதையுமரிவ தில்லை யெனும் வாக்கெமக்கு நல்குக; காதுகளோடு செல்லுக" என்று கருணைமொழி மொழிந்து கர்ணதானஞ் செய்து நின்றார். ஆழ்வார், ஆங்குற்ற தமதிருக்கையினை யடைதலுந் திருவண்ணாமலைச் சிவாலயக் கோபுரம் தமது கண்ணிற்குப் புலப்படுவ தாயிற்று. உடனே அது தெரியாதிருக்கத் திரையிடும்படி செய்தனர். அஃதுணர்ந்த அருணகிரிநாதனார் அக்கண் மறைக வென்றலும், ஆழ்வார் பார்வையிழந்து வருந்தி மீட்டுமவரைத் தரிசித்துக் காது கொடுத்தவாறு கண்ணுங்கொடுக்க வேண்டுமென்று பணிந்தார். அருணகிரியார், அருணை நாதனைப் புகழ்ந்து பாடும்போது கண்கள் பெறலாமென்றபடி ஆழ்வாருஞ் சிவனைப் புகழ்தல் பொருந்தத் தாம் பாடிவரு பாரதத்தில் **"ஓரேனந்தனைத் தேடவொளித் தருளுமிரு பாதத் தொருவன்"** என்றற் றொடக்கத்துச் செய்யுள் பாடும்போது இழந்த பார்வையிரண்டும் பெற்றனர்.

பின்றை, அவ்வண்ணாமலைப்பதியின் கண்ணே

பொறாமைப் பேய் பிடித்தவனும், மந்திரமூலமாகச் சத்தியுபாசனை சித்தித்தவனு மான சம்பந்தாண்டா னென்னு மொரு சமணன், முருகப் பெருமானுடைய திருவருட் பிரகாசம் நிரம்பியிராநின்ற அருணகிரி நாதப் பெருந்தகைக்கு இன்னல் பல விளைவிக்க வெண்ணினான். உடனே அவன், அந்தப் பிரபுடதேவ மஹாரராஜர் பாற் சென்று யான் தேவியை நேரே அழைத்து நுமக்குத் தரிசனந்தரச் செய்வலென்றும், அங்ஙனமே முருகவேளையு மழைக்கும்படி அருணகிரிநாதரைக் கேட்க வேண்டுமென்றுங் கூறி இராஜாவைத் தூண்டி நிற்போனாயினான். பின்னே அவன், யான் தேவியை அழைக்கத் தவறுவனேல் இந்நகருள் யான் பிரவேசியாது நீங்குவதுண்மை யென்றுங் கூறி நின்றனன். இவ்வாற்றானே அவனுடைய தீய குணங்களையும் அருணகிரியாரது பேராற்றலையு மறிந்த இராஜா, இவனை யொழிக்குந் தருணமிதுவே யென வெண்ணினவராய்ச் சமணன் கருத்தை ஆசிரியர் - அருணகிரி நாதர்க்கறிவித்து ஒரு பெருஞ்சபையுங் கூட்டினார். ஆண்டுச் சம்பந்தாண்டான் உரையின்படி தேவி தரிசனங்கொடாமையின், அவன் தோல்வி யுற்றனன். அஞ்ஞான்று அருணகிரியாரின் அன்பு வலைப்பட்ட செவ்வேள், ஒரு கற்கம்பத்திடை மயில்மீது தரிசனந் தந்தருளினன். இச்செய்தி, அப்பொழுது பாடப்பட்ட "**அதலசேடனாராட**" என்றற்றொடக்கத்துத் திருப்புகழில் - "**மயிலுமாட நீ யாடி வர வேணும்**" "**உதயதாமமார்பார் பிரபுடதேவ மாராசனுளமுமாட வாழ் தேவர் பெருமாளே**" என வரும் தொடர்களைக் கொண்டறியலாம்.

அருணையம்பதி ஆலயத்திற் **கம்பத்திளையனா** ரெனத் திருக்கோயில் கொண்டிருக்கிறவன் அத்தரிசனமூர்த்தியே யென்க. இறைவன் தரிசனந்தந்தவுடன் அருணகிரியார், அவ்வொளிமிக்க தரிசனத்தை ஒரு கண்ணாற் காணுமாறு இராஜாவுக் கறிவித்தும் அவர் இரண்டு கண்களாலும் நோக்கினர்; உடனே அவ்விரு விழிகளு நோக்கின்றி மாழ்கின; அருணகிரியார் விபூதி பிரசாதித்துப் பார்வை யுண்டாகுமாறு செய்தனர். இராஜாவும் முருகவேட் கடிமையாயினர். பின்பு, சம்பந்தாண்டான், அரசர்பாற் கூறியவாறு திருவண்ணாமலையை நீத்துப் பிறிதோரிடம் புக்கிருந்தனன். பெயர்த்தும் அவன் வருந்தி இராஜாவை நட்புச் செய்து கொண்டு அருணையம்பதியை அடைந்தனன். அடைந்த அவன், விண்ணுலகத்துக் *கற்பக மலரை அருணகிரியாரைக் கொண்டு தருவித்துக் கண்ணுறலா மென்று அரசற்கொரு யோசனை சொல்லினன். அது செவிக்கொண்ட வேந்தரும் அருணகிரிநாதரைத் தரிசித்து நிகழ்ச்சியை விண்ணப்பித்துக் கொள்ள; நாதரும் அது தருவலென்று உறுதியுரைத்துப் பின்பு இம்மண்ணுலகினின்றும் விண்ணுலகிற்கு இம்மானுட வுடலோடு செல்லல் கூடாதென்பதை முன்னிட்டுத் தாமேயொரு கிளியுருவத்தைக் கொண்டு விசும்பிற் றாவிப் பறந்து அவ்வுலகடைந்து ஒரு கல்லையிற் சில கற்பக மலர்களையிட்டு வாயாற் கவ்விக் கொணர்ந்து மலர் மணம் நகர் முழுதுங் கமழ அரசர்க் களித்து அவ்வுருவத்தை மாற்றித் தமது பழைய உருவத்தைக் காட்டி நின்றனர்.

---

* பாரிசாத மலரென்றுஞ் சிலர் கூறுப.

இஃதவருக்கொரு விளையாட்டாயிருந்தது. இச்செய்திக்கு மாறாக, அவர், தம்முடலைக் கோபுரத்தின் மீது விடுத்துக் கிளியுடலுட்புகுந்து சென்றாரென்பதும், அவ்விடுத்த உடல் சம்பந்தாண்டா னுடைய தூண்டுதலான் எரிக்கப்பட்ட தென்பதுஞ், சுவாமிகளுடைய அருட்டகைமைக்கும், ஆற்றலுக்கும் முரண்படு வனவாகவுள. அந்நாதர், குகப்பிரமத்தின தருளாற் சருவஞ்ஞத்துவம், சுவப் பிரகாசத்துவம் முதலிய கலியாண குணங்களையடைந்த பெருந்தகையின ரென்னு முண்மையானும் இழிதகையுடை வாயு கும்பக யோகத்தைக் கண்டித்தொதுக்கிய அவர் அந்த யோகத்தாற் செய்யவல்ல பரகாயப் பிரவேசஞ் செய்யத் துணியாரென்னு நிச்சயத்தாலும், **ஶ்ரீமத் – ஸ்காந்த மஹாபுராண**மென்னும் முதல்வன் புராணத்துச் சம்பவங்காண்டத்து 41 –ஆம் அத்தியாயத்தில் –

**"உலகில் எம்மைச் சரணமடைந்தோர்க்கு அச்சம் யாது? இச்சகத்தே எம்மடியார்க்கு பகைஞர் யாவர்? பிணியுமுண்டோ? மனிதப் பதடியாயுள்ளவொருவன் அறிவீனத்தால் எம்மடியாரைப் பகைப்பானாயின் அவன் எம்மையே பகைத்தவனாவன். எமக்கபராதஞ் செய்தானது செய்கையை யாம் மன்னிப்போம். அந்தத் துராத்துமாவின் செய்கையை யொருபோதும் மன்னியோம். இந்திரனாலாதரிக்கப்படினும் அவனைக் கண்டனஞ் செய்துவிடுவோம்."**

எனவரு கட்டுரைகள் கந்தப்பிரானுடைய திருவாக்கா யிருத்தலின் அப்பிரான் தம் மெய்யடிய வனுடம்பிற்குப்

பகைஞனழிவு புரிய பார்த்திரா னென்பதனானும் முரண்படுவனவாக வுளவென்னும் இம்முடிபு பெரிதுங்கொளக்கிடக்கின்றது.

சொற்சுவை, பொருட்சுவை, யாப்புச்சுவை, அணிச்சுவைகளோடு சந்தம் பல செறிந்து விளங்கா நின்ற திருப்புகழும், சீர்பாதவகுப்பு முதலிய பல வகுப்புகளைக் கொண்ட திருவகுப்பும், கந்தரந்தாதியும், கந்தரலங்காரமுமாகிய இவற்றைப்பாடி அருளிய இவ்வருணகிரி நாதனார், இறுதியாகத் தமது பிரமானுபவத்தைக் கந்தரனுபூதி யென்னும் ஒரு நூலால் நன்கு பிரகாசப்படுத்தியருளினார். இந்நூல் **“ஆடும் பரிவேல்”** என்று தொடங்கப்பட்டு **“பேசாவனுபூதி பிறந்ததுவே”** என முடிந்தமையின் *43 பாடல்களையே யுட்கொண்டது. இத்திற நூலனைத்தும் உலகினர் பெரிதும் பேணிக் கொள்ளத்தக்க திருநெறித் தமிழ் வேதமாயுள்ளன. திருப்புகழ்ப் பாடல்கள் 16,000 - எனப்படும். அவை ஒரு புத்தகமாக இல்லாத காரணம் - முன்மொழிந்தபடி நாதனார் அருணைக் கோபுரத்தினின்றவாறே அப்புத்தகவேடு பலவும் பூமியிற் சிதறி வீழுமாறு உருவி விட்டனரென்பதை வலியுறுத்துவதாம். அவைகள் பல்லோர் வயப்பட்டுப் பலபலவாய்ப் பல்லிடம் போயினவென்க. மயில் விருத்தமென்பதொன்று, சம்பந்தாண்டான் வாதகாலத்திலே

---

* 43-ம் குமாரபிரானின் நாற்பத்து முக்கோணச் சக்கரத்துள் அடைக்கப்படுவனவென்ப. இவற்றின் மேலுள்ள 8 விருத்தம் வெள்ளி நுழைப்பென்று மதிகமாகக் காணப்படு செய்யுள்கள் ஏவர் நுழைப்பெனல் புலப்பட வில்லையென்றுங் கூறுப.

இத்திருப்புகழ் முனிவராற் பாடப்பட்டவொரு பிரபந்தமெனப் படுகின்றது. பின்பு, கந்தரனுபூதி யிறுதி மொழிகளின்படி மோன நிட்டையிலிருந்த ஆசிரியர் – அருணகிரிநாத முனீந்திரர், ஸ்ரீமந்–மாணிக்கவாசக சுவாமிகளைப் போலச் சிதாகாசப் பெருவெளியிலே மறைந்தருளினார்.

***அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.***

**"வேதநிந் தகனே புன்மை விடக்குணும் புலையனாவான்
வேதநல் லந்த நிந்தன் வெவ்வினை வேட னாவான்
வேதக ஞானி நிந்தை விளம்பினன் பித்த னாவான்"**

வேத நிந்தகர், வேதாந்த நிந்தகர், வேதஞானி நிந்தகராய இன்னோரடை பிறப்புக்கள் இன்னதின்னதென்பனவும் மேலே போந்த சிவதருமோத்தரத் தூக்குழைப் பெற்றாமன்றே. இழித்துக்கூறலு நிந்தையின்பாற்படும்.


**– ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்**

# அருணகிரிநாதருக்குக் குருபூசை ஏற்படுத்தல்

**சந்தமுனிவராய ஸ்ரீமத்–அருணகிரி நாதருக்கொரு குருபூஜை அவர் வீடுபேறெய்திய காலந் தொடக்கமாக வுறும் எக்காலத்தேனும் எவரானுஞ் செய்யப் படாதிருத்தல் கருதிய நம் ஆசிரியர், இறைவன்றிருவரு ளிருந்தவாறு அவ்வித குருபூஜையை உத்தராயணத்து ஆறாவது பௌர்ணமி தோறும் நடத்தும்படி சீடர்களுக்குப் போதித்தார். அவர்களும் பிறரும் அப்படியே நடாத்தி அதனை நடைபெறச் செய்தனர். போதித்த காலமும் நாதர் சரித்திரத்தை யெடுத்துரைத்த காலமும் (கி.பி. 1918) காலயுத்தி வருஷமென்றே கோடற்பாற்று.**

**–ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் சரித்திரம்**


ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள்


வேலும் மயிலும் துணை
ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள்